Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

IV.எவையேனும் 2 வினாக்களுக்கு விரிவான விடையளி :


1. i) கணிப்பொறி என்பது வன்பொருள் மற்றும் மென்பொருளின் கலவையாகும்.
ii) கணிப்பொறியில் உள்ள பருபொருள்களான மதர்போர்ட் (mother board), நினைவகம் (memory), திரையகம் (monitor) மற்றும் விசைப்பலகை போன்றவை வன்பொருள் ஆகும்.
iii) மென்பொருள் என்பது கணிப்பொறிக்கு வழங்கப்படும் கட்டளை அல்லது கட்டளைகளின் தொகுப்பு ஆகும்.
iv) ஒரு கணிப்பொறியின் இயக்குவதற்கு வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகிய இரண்டும் துணை புரிகிறது.
v) கணிப்பொறியில், கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பணியும், உள்ளீடு செயலாக்கம் வெளியீடு என்ற சுழற்சியை (IPO - Input Process Output cycle) அடிப்படையாக கொண்டு செயலாற்றுகிறது.

உள்ளீட்டகம்

i) உள்ளீட்டகம் அனைத்து வகையான தரவுகளையும் கணிப்பொறிக்குள் உள்ளிடப் பயன்படுகிறது.
ii) உள்ளிடப்பட்ட தரவுகள் செயலாக்கத்திற்காக நினைவகத்தில் சேமிக்கப்படுகின்றன.
iii) எடுத்துக்காட்டு விசைப்பலகை, சுட்டி போன்றவை.

மையச் செயலகம்

i) மையச் செயலகம் என்பது, கணிப்பொறிக்கு வழங்கப்படும் கட்டளைகளை, கணிப்பொறி புரிந்துகொள்ளும் வகையில் மாற்றி அதனைசெயலாக்கம் செய்யும் முதன்மையான பகுதியாகும்.
ii) இது நினைவகம், உள்ளீடு மற்றும் வெளியீடு போன்ற மற்ற அனைத்துச் சாதனங்களின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது.
iii) இது தரவை உள்ளீடாகப்பெற்று, கொடுக்கப்பட்ட கட்டளைகளின் படி செயல்படுத்தி, வெளியீட்டை வெளியிடுகிறது.
iv) மையச்செயலகத்தில் மூன்று பகுதிகள் உள்ளன, அவைகட்டுப்பாட்டகம், கணித ஏரணச் செயலகம் வெய் மற்றும் நினைவகம் ஆகும்.



கட்டுப்பாட்டகம்

i) மையச்செயலகம் - நினைவகம் மற்றும் உள்ளீடு / வெளியீடு சாதனங்களுக்கு இடையே பரிமாறப்படும் தரவைக் கட்டுப்பாட்டகம் கட்டுப்படுத்துகிறது.
ii) மேலும் ஒரு கணிப்பொறியின் முழுச் செயல்பாடுகளையும் இது கட்டுப்படுத்துகிறது.

நினைவகம்

i) முதன்மை நினைவகம் மற்றும் இரண்டாம் நிலை நினைவகம் என இருவகை நினைவகங்கள் உள்ளன.
ii) தரவு மற்றும் நிரல் கட்டளைகள் நிறைவேற்றத் தயாராக இருக்கும்போது அதனைத் தாற்காலிகமாகச் சேமிக்க முதன்மை நினைவகம் பயன்படுகிறது.
iii) தரவுகளை நிரந்தரமாகச் சேமித்து வைக்க இரண்டாம் நிலை நினைவகம் பயன்படுகிறது.

வெளியீட்டகம்

i) பயனர்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தகவலைத் தெரிவிக்கும் எந்தவொரு வன்பொருளும் வெளியீட்டகம் எனப்படும்.
எடுத்துக்காட்டு: திரையகம், அச்சுப்பொறி போன்றவை.
ii) முதன்மை நினைவகம் மற்றும் இரண்டாம் நிலை நினைவகம் என இருவகை நினைவகங்கள் உள்ளன.
iii) தரவு மற்றும் நிரல் கட்டளைகள் நிறைவேற்றத் தயாராக இருக்கும் போது அதனைத் தற்காலிகமாகச் சேமிக்க முதன்மை நினைவகம் பயன்படுகிறது. தரவுகளை நிரந்தரமாகச் சேமித்து வைக்க இரண்டாம் நிலை நினைவகம் பயன்படுகிறது.

2. தொழில் நுட்பத்தின் வளர்ச்சி, கணிப்பொறித் துரையின் வளர்ச்சியை தீர்மானிக்கிறது. பல்வேறு வடிவமைப்பு கட்டங்களின் அடிப்படையில் கணிப்பொறிகளை பல தலைமுறைகளாக வகைப்படுத்தலாம்.

1. கணிப்பொறியின் தலைமுறை : முதலாம் தலைமுறை

காலம் : 1942-1955
பயன்படுத்திய முதன்மைபொருள் : வெற்றிடக் குழல் (Vaccum tude)

நிறை/குறை :

i) அளவில் பெரியது
ii) அதிக அளவு மின்சாரத்தை எடுத்துக்கொண்டது.
iii) அதிக வெப்பம் காரணமாகச் செயலிழக்கும்.
iv) இயந்திர மொழி பயன்படுத்தப்பட்டது.
v) முதல் தலைமுறை கணிப்பொறிகள் - ENIAC, EDVAC, UNIVAC 1, ENAIC -27 டன் எடை, பரப்பளவு 8 x 100 x 3 அடி, மின்சாரத் தேவை 150 வாட்கள்.

2. கணிப்பொறியின் தலைமுறை : இரண்டம் தலைமுறை

காலம் : 1955-1964
பயன்படுத்திய முதன்மைபொருள் : திரிதடையகம்

நிறை/குறை :

i) முதல் தலைமுறையுடன் ஒப்பிடும்போது அளவில் சிறியது, குறைந்த மின்சாரத்தை எடுத்துக் கொண்டது.
ii) குறைந்தவெப்பத்தை உருவாக்கியது.
iii) துளையிட்ட அட்டை, உள்ளீட்டுக்கு பயன்படுத்தப்பட்டது.
iii) முதல் இயக்க அமைப்பு (Operating system) உருவாக்கப்பட்டது. தொகுப்பு செயலாக்க அமைப்பு (Batch Processing and multiprogramming operating system)
iv) இயந்திர மொழி மற்றும் அசெம்பளி மொழி பயன்படுத்தப்பட்டது.
v) இரண்டாம் தலைமுறை கணிப்பொறிகள் - IBM 1401, IBM 1620, UNIVAC 1108

3. கணிப்பொறியின் தலைமுறை : மூன்றாம் தலைமுறை

காலம் : 1964-1975
பயன்படுத்திய முதன்மைபொருள் : ஒருங்கிணைந்தசுற்றுகள் Integrated Circuits (IC)

நிறை/குறை :

i) கணிப்பொறிகள் அளவில் சிறியது, விரைவான செயல்பாடு மற்றும் அதிக நம்பகத் தன்மையுடையது.
ii) குறைந்த மின்சாரத்தை எடுத்துக் கொண்டது.
iii) உயர் நிலை மொழி பயன்படுத்தப்பட்டது.
மூன்றாம் தலைமுறை கணிப்பொறிகள் - IBM 360 series, Honeywell 6000 series

4. கணிப்பொறியின் தலைமுறை : நான்காம் தலைமுறை

காலம் : 1975-1980
பயன்படுத்திய முதன்மைபொருள் : நுண் செயலி (மிகப்பெரிய அளவிலான ஒருங்கிணைந்த சுற்றுகள்) Very Large Scale Integrated Circuits (VLSI)

நிறை/குறை :

i) சிறியது மற்றும் வேகமானது
ii) IBM மற்றும் APPLE போன்ற ண் கணிப்பொறிகள் உருவாக்கப்பட்டது
iii) கையடக்ககணிப்பொறிகள் அறிமுகமாகின

5. கணிப்பொறியின் தலைமுறை : ஐந்தாம் தலைமுறை

காலம் : 1980-இன்று வரை
பயன்படுத்திய முதன்மைபொருள் : (மீப்பெரு அளவிலான ஒருங்கிணைந்த சுற்றுகள்) Ultra Large Scale Integration (ULSI)

நிறை/குறை :

i) இணைசெயலாக்கம் (Parallel processing)
ii) மீ -கடத்தி
iii) கணிப்பொறியின் அளவு கணிசமாகக் குறைக்கப்பட்டது.
iv) நிழற்படங்கள் மற்றும் வரைபடங்களைப்புரிந்து கொள்ளும் திறன்.
v) தீர்மானத்தில் மற்றும் தருக்க முறையில் அதிகச் சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல்.

6. கணிப்பொறியின் தலைமுறை : ஆறாவது தலைமுறை

காலம் : எதிர் காலத்தில்
பயன்படுத்திய முதன்மைபொருள் : அறிவு சார்ந்தகணிப்பொறிகள்

நிறை/குறை :

i) இணைமற்றும் பகிர்வு கணிப்பீடு
ii) கணிப்பொறிகள் சிறந்ததாகவும், விரைவாகவும் மற்றும் சிறியதாகவும் இருக்கும்.
iii) செயற்கைமனிதர்கள் (சுடிடெவள) உருவாக்குதல்
iv) இயற்கைமொழி செயலாக்கம்
v) குரல் அறிதல் மென்பொருள் உருவாக்குதல்.

3. **அ) மைபீச்சு அச்சுபொறி (Inkjet Printers):**

i) மைப்பீச்சு அச்சுப்பொறிகள் கருஞ்சிவப்பு (Magenta), மஞ்சள் (Yellow) மற்றும் சியான் (Cyan) உள்ளடக்கியமைகுப்பியைப்பயன்படுத்தி வண்ணசாயலை (Color tones) உருவாக்கியது.
ii) ஒரு நிறவண்ணத்தில் (monochrome) அச்சிடுவதற்கு கருப்பு (black) மைகுப்பியை பயன்படுத்துகிறது.
iii) மைப்பீச்சு அச்சுப்பொறிகள் ஒரு காகிதத் தாளில் மின்னூட்டம் பெற்றமையைத் தெளிப்பதன் மூலம் செயல்படுகிறது.
iv) இதன் அச்சிடம் வேகம் பொதுவாக ஒரு நிமிடத்திற்கு 1 முதல் 20 பக்கங்களை அச்சிடும் (PPM -Page Per Minute)
v) மைப்பீச்சு அச்சுப்பொறிகள், வெப்பம் மூலம் மின்கலன் சூடாக்குவதால் மைகாகிதத்தில் குமிழிகளாக (bubbles) தெளிக்கப்படும் தொழில்நுட்பத்தை அல்லது தகைவு மின்சாரத்தை (piezoelectricity) பயன்படுத்தி மின்சுற்றுகள் மூலம் கட்டுப்படுத்தப்படும் சிறிய மின்னோட்டங்கள் ஜெட்வேகத்தில், அச்சுபொறியின் உள்ளே மையைப்பாப்புகின்றன.

ஆ) பல்லூடகப்படவீழ்த்தி (Multimedia Projector):

i) பல்லூடகப்படவீழ்த்தி, கணிப்பொறி திரையக வெளியீட்டைப்பெரியதிரையில் திரையிடப்பயன்படுகிறது.
ii) இவைகள் வகுப்பறையில் அல்லது கூட்ட அரங்குகளில் விளக்கக் காட்சிகளைக் காட்சிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.

இ) பட்டைக் குறியீடு / கியூ. ஆர் படிப்பான் (Bar Code / QR Code Reader):

i) பட்டைக் குறியீடு என்பது வெவ்வேறு தடிமன் வரிசையில் அச்சிடப்படும் ஒரு வடிவம் ஆகும்.
ii) பட்டைக் குறியீடு படிப்பான், பட்டைக் குறியீட்டைப் படித்து அவற்றை மின் துடிப்புகளாக (electric pulses) மாற்றி கணிப்பொறி செயலகத்திற்கு அனுப்பும் ஒரு கருவியாகும்.
iii) கணிப்பொறியில் தகவலை விவராகவும் பிழையின்றிப் பதிவு செய்யவும் இது பயன்படுகிறது.
iv) கியூ.ஆர் (Q.R - Quick Response) குறியீடானது, இரு பரிமாண பட்டைக் குறியீடாகும், இது ஒரு கேமரா மூலம் படிக்கப்படடுப் படத்தை உணர்த்துகிறது.

III. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி :

4. i) **வேகம் (SPEED):**

கணினி என்பது மிக விரைவாகச் செயற்படத்தக்க ஒரு பொறியாகும். கைமுறையால் அதிக நேரம் எடுக்கும் ஒரு பணியைக் கணினி மூலம் சி செக்கன்களில் செய்து முடிக்கலாம்.

ii) **செம்மை (Accuracy):**

கணினி மிக உயர்ந்த செம்மையுடன் செயற்படும் உபகரணமாகும். கணினியின் செயற்பாட்டில் யாதாயினும் தவறு ஏற்பட்டால், அதற்குக் காரணம் மனிதனால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களிலும் தரவுகளிலும் ஏற்படும் தவறே ஆகும். அதாவது, கணினிக்குத்

QB365 QUESTION BANK 365 Study Material

தேவையான செய்திரல்களைத் தயாரிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தற்கோவையின் செம்மையை உறுதிப்படுத்துவது அறிவுறுத்தல்களைத் தயாரிப்பவர்களின் அடிப்படைப் பொறுப்பாகும்.

iii) **வினைத்திறன் (Efficiency):**

சரியான குழுவில் நிறுவப்பட்டுள்ள கணியை எவ்வித ஓய்வுமின்றித் தொடர்ச்சியாக ஒரே கதியில் அல்லது ஒரே வினைத்திறனுடன் தேவையான அளவு நேரத்திற்குச் செயற்படுத்தலாம். (மனிதனுக்கு ஏற்படும் களைப்பு, கவனக் குறைவு போன்ற பிரச்சினைகள் கணினிக்கு ஏற்படாமை இதற்கு முக்கிய காரணமாகும்).

iv) **பல்பணிக் செய்பணி (Versatility):**

பல பணிகளில் ஈடுபடும் ஆற்றல் இருப்பது கணினியின் ஒரு சிறப்பியல்பாகும். அதாவது கணினி ஒரு பணியை முடித்தவுட அதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வேறொரு பணியில் முன்னர் இருந்து அதே வினைத்திறனுடன் ஈடுபடக் கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது.

v) **சேமித்தலும் மீட்பும் (Storing and Tetriving):**

கணினியைப் பயன்படுத்தும்போது தரவுகளையும் தகவல்களையும் தேவையான அளவு காலத்திற்கு அதில் சேமித்து வைத்து, தேவையானபோது கணப்பொழுதில் அவற்றை திருப்பிப் பெற்றுக் கொள்ளும் திறன் இருப்பது கணினியின் மற்றொரு சிறப்பியல்பாகும்.

5. i) பணியிடத்தில் பலர் வருகை பதிவு செய்யவும் சான்றுகளை பதிவு செய்யவும் பயன்படுத்துகின்றனர் (to keep records).
ii) தரவை அலச (analyze data), ஆராய்ச்சி செய்ய (do research), திட்டப்பணிகளை நிர்வகிக்க (manage projects) கணினிகளைப் பயன்படுத்துகிறார்கள்.
iii) வீட்டில், நீங்கள் கணினியைப் பயன்படுத்தித் தகவல்களைத் தேடி எடுக்கலாம் (to find information), படங்களையும் இசையையும் (store pictures and music) வைத்துக்கொள்ளலாம்.
iv) வரவு செலவு கணக்கிடலாம்
v) விளையாட்டுகள் ஆடலாம் (யீடயல பயஅநள).
vi) மற்றவர்களுடன் தொடர்பு கொண்டிருக்கலாம் (Communicate With Others).
vii) இணையத்துடனும் இணைக்கலாம் (to connect to the Internet); இணையம் என்பது உலகெங்கும் உள்ள கணினிகளை இணைக்கும் ஒரு பிணையம் (network). இணைய வசதி (Internet access) இருந்தால் நீங்கள் உலகெங்கும் உள்ள மனிதர்களோடு தொடர்பு வைத்திருக்கலாம், மிகப் பெரிய அளவு தகவல்களைக் கண்டறியலாம்.
viii) தெரு வரைபடங்களைக் (street maps) காணலாம், உங்கள் நகரத்திற்கான வானிலை (weather forecast) முன்னறிவிப்பினை பார்க்கலாம்.
ix) பெரும்பாலான நிறுவனங்கள், அரசு அமைப்புகள் (government agencies), அருங்காட்சியகங்கள் (museums), நூலகங்கள் (libraries) ஆகியனவற்றின் வலைத்தளங்களில் அவற்றின் தயாரிப்புகள் (products) சேவைகள் (services), தொகுப்புகள் (உடிடடநஉவடிளே) போன்றவை பற்றிய தகவல்களைப் பார்க்கலாம்.
x) அகராதிகள் (dictionaries), கலைக் களஞ்சியங்கள் (encyclopedias) போன்ற தகவல் ஆதாரங்களும் பரவலாகக் கிடைக்கின்றன.

6. **1. திரையகம் (Monitor)**
i) தகவலைத் திரையில் காட்டப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வெளியீட்டு சாதனம் திரையகம் ஆகும்.
ii) இது தொலைக்காட்சி பெட்டி போன்றது. திரையகத்தில் படங்கள் பிக்ஸல் (PIXELS) எனப்படும் படக் கூறுகளுடன் உருவாக்கப்படுகிறன.
iii) ஒர் வண்ணமுடைய திரையகம் கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் காட்டுகிறது, வண்ணத் திரையகம் பல நிறங்களில் காட்டுகிறது.

2. வரைவி (Plotter)
i) வரைவி என்பது ஒரு வெளியீட்டுச் சாதனம் ஆகும்
ii) இது தாள்களில் வரைகலை வெளியீட்டை அச்சிட பயன்படுகிறது.
iii) இது படங்களை வரைய ஒன்றை நிறம் அல்லது பல வண்ணம் கொண்ட பேனாக்களைப் பயன்படுத்துகிறது.

3. அச்சுப்பொறிகள் (Printers)
i) தாள்களில் தகவல்களை அச்சிட அச்சுப்பொறிகள் பயன்படுத்தப்படுகிறது.
அச்சுப்பொறிகள் இரண்டு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.
ii) தட்டல் அச்சுபொறிகள் (Impact Printers)
iii) தட்டா அச்சுப்பொறிகள் (Non Impact Printers)

7. i) இந்தவகையில் ஒரு சிறு கம்பி, மைநாடா (ribbon) மீது தட்டி ஒரு புள்ளியை ஏற்படுத்தும் அல்லது ஒரு முழு எழுத்தை தட்டி அந்த எழுத்தை ஏற்படுத்தும்.
ii) இந்த அச்சுப்பொறிகள் இயந்திர அழுத்தத்தைப் பயன்படுத்தி ஒரே சமயத்தில் பலபடிகள் எடுக்கவகைசெய்கிறது. வரி அச்சுப்பொறி மற்றும் வரிபுள்ளி அச்சுப்பொறி ஆகியவை தட்டல் வகைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.
iii) புள்ளி அச்சுப்பொறி (Dot Matrix Printer)
iv) ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான செருகி அல்லது கம்பிகளைப்பயன்படுத்தி அச்சிடுகிறது. ஒவ்வொரு புள்ளியும் ஒரு சிறிய உலோகக் கம்பி மூலம் உருவாக்கப்படுகிறது.
v) இது ஒரு சிறியமின்காந்தம் அல்லது வரிச் சுருள் சக்தியைச் செயல்படுத்தி நேரடியாகவோ அல்லது நெம்புகோல்களாலோ செயல்படுகிறது.
vi) இதில் பொதுவாக ஒரு நேரத்தில் ஒரு வரி உரையை மட்டுமே அச்சிடமுடியும். இந்த அச்சுப்பொறிகளின், அச்சிடும் வேகம் 30 முதல் 1550 சிபிஎஸ் (CPS - Character Per Second) வரைவேறுபடுகிறது.

8. i) திரையகம் தகவலை விஜிஏ (ஒளிஉரு வரைபட வரிசை) VGA - (Video Graphics Array) மூலம் திரையில் காட்டுகிறது.
ii) விசைப்பலகை திரையகத்துடன் தொடர்பு கொள்ள ஒளிஉரு வரைபட அட்டை (Video Graphics Card) உதவுகிறது.
iii) இது கணிப்பொறி மற்றும் திரையகத்தின் இடையே இடைமுகமாக செயல்படுகிறது. அண்மையில் உள்ள மதர்போர்ட் (mother board)-களில் உள்ளிணைந்த வரைப்ட அட்டை வழக்கமாக உள்ளது.

II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி :

9. i) கணிப்பொறி என்பது ஒரு மின்னணு சாதனம் ஆகும்.
ii) கொடுக்கப்பட்ட கட்டளைகலளை உள்ளீடாகப் பெற்ற, அதிவேகமாகச் செயல்பட்டு, விரும்பிய வெளியீட்டை வழங்கும் ஒரு மின்னணு
iii) கணிப்பொறிகள் தரவுகளைச் சேமிக்கவும், வானிலை முன்னறிவிப்பு, விமானம், ரயில் போக்குவரத்து பயணச்சீட்டு முன்பதிவு, பொழுதுபோக்கு போன்ற இதர பணிகளுக்கு உதவியாக உள்ளது.

10. வ.எண் தரவு தகவல் 1 பல்வேறு வகைகளிலும் திரட்டப்படும் அடிப்படை செய்தித் துணுக்கு தரவு எனப்படும். தகவல் என்பது முடிவுகளை எடுக்கக்கூடிய உண்மைகளின் தொகுப்பாகும் 2 இது தொடர்பு கொள்வதற்கும், விளக்குவதற்கும் அல்லது செயலாக்கம் செய்வதற்கும் ஏற்றது. சரியான பொருள் கொண்ட / அர்த்தமுள்ள தகவலை தருகின்றது. 3 எடுத்துக்காட்டாக 134, 16, 'கவிதா', 'சி' போன்றவை தரவிற்கு உதாரணம். எடுத்துக்காட்டாக, கவிதாவின் வயது 16 என்ற கூற்று.

QB365 QUESTION BANK 365 Study Material

11. i) முதன்மை நினைவகம் மற்றும் இரண்டாம் நிலை நினைவகம் என இருவகைநினைவகங்கள் உள்ளன.
ii) தரவு மற்றும் நிரல் கட்டளைகள் நிறைவேற்றத் தயாராக இருக்கும்போது அதனைத் தற்காலிகமாகச் சேமிக்க முதன்மை நினைவகம் பயன்படுகிறது.
iii) தரவுகளை நிரந்தரமாகச் சேமித்துவைக்க இரண்டாம் நிலை நினைவகம் பயன்படுகிறது.

12.

வ.எண்	உள்ளீட்டகம்	வெளியீட்டகம்
1	உள்ளீட்டகம் அனைத்து வகையான தரவுகளையும் கணிப்பொறிக்குள் உள்ளிடப்பயன்படுகிறது.	பயனர்கள் புரிந்து கொள்ளக் கூடியவகையில் தகவலைத் தெரிவிக்கும் எந்தவொரு வன்பொருளும் வெளியீட்டகம் எனப்படும்.
2	உள்ளிடப்பட்ட தரவுகள் செயலாக்கத்திற்காக நினைவகத்தில் சேமிக்கப்படுகின்றன.	நினைவகத்தில் சேமிக்கப்படுகின்ற தரவுகள் பயனர்கள் புரிந்து கொள்ளக்கூடியவகையில் வெளியீட்டகம் தகவலை தெரிவிக்கும்.
3	எடுத்துக்காட்டு விசைப்பலகை, சுட்டிப் போன்றவை.	எடுத்துக்காட்டு: திரையகம், அச்சுப்பொறி போன்றவை.

13.

வ.எண்	முதன்மைநினைவகம்	இரண்டாம் நிலை நினைவகம்
1	முதன்மைநினைவகத்துக்கு மின்சாரம் நிறுத்தப்பட்டவுடன் அதில் சேமிக்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் அழிந்துவிடும்.	இரண்டாம்நிலை நினைவகத்திற்கு மின்சாரம் நிறுத்தப்பட்டாலும் அதில் சேமிக்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் அழியாமல் இருக்கும்.
2	முதன்மைநினைவகத்திற்கு எடுத்துக்காட்டு, நேரடி அணுகல் நினைவகம் (RAM - Random Access Memory) ஆகும்.	வன்வட்டு (Hard disk), குறுவட்டு (CD - ROM) மற்றும் டிவிடி ரோம் (DVD ROM) போன்றவை இரண்டாம் நிலை நினைவகத்திற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

I. சரியான விடையளி :

14. (a) வெற்றிடக்குழல்
15. (c) RAM
16. (c) திரையகம்
17. (b) சுட்டி
18. (b) வரைவி
19. (a) தொடுதிரை
20. (a) உடன் தொடக்கம்
21. (c) Power on Self Test
22. (b) RAM
23. (c) மூன்றாம்

QB 365 Study Material
QUESTION BANK 365